**நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.I, திண்டிவனம்,**

**முன்னிலை: ஸ்ரீமதி. ம. இளவரசி M.L.,**

**நீதித்துறை நடுவர் எண். I திண்டிவனம்.**

**2026 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 24-ம் நாள் வெள்ளிக்கிழமை**

**2057 திருவள்ளுவராண்டு ஸ்ரீபராபவ வருடம் சித்திரை திங்கள் 11-ம் நாள் வெள்ளிக்கிழமை**

## CC. No.589 of 2025

**(CNR No.TNVP10-02279-2025)**

| | | | |
|---|---|---|---|
| 1) | வழக்கு எண் | : | C.C.No. 589/2025 |
| 2 | குற்ற முறையீடுபவர் | : | தமிழ்நாடு அரசு அதன் சார்பாக<br>காவல் உதவி ஆய்வாளர்,<br>ஒலக்கூர் காவல் நிலையம்,<br>குற்ற எண். 399/2024,<br>பிரிவுகள் 296(b), 118(1), 351(3) BNS, |
| 3 | எதிரியின் விவரம் | | முனுசாமி, வயது 40,<br>த/பெ பெருமாள்,<br>NPO, 433/1, ஆணிப்பூர் சாலை,<br>நங்குணம் கிராமம்,<br>நல்லாத்தூர் அஞ்சல்,<br>திண்டிவனம் வட்டம். |
| 4 | சம்பவ தேதி | : | 18.12.2024 |
| 5 | முறையீடு | : | 18.12.2024 |
| 6 | எதிரி நீதிமன்ற காவலில் இருந்த நாள் | : | Anticipatory Bail |
| 7 | குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாள் | : | 22.09.2025 |

ELAVARASI
Digitally signed by ELAVARASI
Date: 2026.04.24 06:59:09 +0530

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 8 | குற்றச்சாட்டு வனையப்பட்ட நாள் | : | 09.01.2026 | | |
| 9 | தாக்கல் செய்யப்பட்ட குற்ற பல்வகை மனுக்களின் விவரம் | : | ---- | | |
| 10 | சாட்சிகளின் விசாரணை | : | **Witness** | **Date of Chief** | **Date of Cross** |
| | | | PW-1 | 13.02.2026 | 13.02.2026 |
| | | | PW-2 | 20.02.2026 | 20.02.2026 |
| | | | PW-3 | 25.02.2026 | 25.02.2026 |
| | | | PW-4 | 25.03.2026 | 25.03.2026 |
| | | | PW-5 | 06.04.2026 | 06.04.2026 |
| | | | PW-6 | 10.04.2026 | 10.04.2026 |
| 11 | பிரிவு 351(1)(பி) BNSS - ன் கீழ் எதிரியிடம் கேள்வி கேட்கப்பட்ட நாள் | : | 16.04.2026 | | |
| 12 | எதிரிகள் தலைமறைவு காலம் பற்றிய விவரம் | : | இல்லை | | |
| 13 | மேல்முறையீடு நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட இடைக்கால தடை உத்தரவு பற்றிய விவரங்கள் | : | இல்லை | | |

ELAVARASI Digitally signed by ELAVARASI Date: 2026.04.24 06:59:15 +0530

| | | | |
|---|---|---|---|
| 14 | தண்டனை அல்லது உத்தரவு | : | எதிரி மீது பிரிவுகள் 296(b), 115(2), 118(1), 351(2) - BNSS- r/w பிரிவு 4 தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்பு சட்டத்தின் கீழான குற்றமானது அரசு தரப்பு சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படாததால் எதிரி குற்றவாளி இல்லை என தீர்மானித்து பிரிவு 271(1) - BNSS-ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. |
| 15 | காலதாமதத்தின் விளக்கம் | : | ___ |

இவ்வழக்கானது கடந்த 22.09.2025-ம் தேதி இந்நீதிமன்ற கோப்பில் எடுக்கப்பட்டு, இந்த வழக்கானது இந்நீதிமன்றத்தில் 10.04.2026-ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்த போது, அரசு தரப்பில் அரசு குற்றத்துறை வழக்கறிஞர் நிலை 2 அவர்கள் ஆஜராகியும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.அருண்பிரகாஷ், B.A.B.L., அவர்கள் ஆஜராகியும், விசாரணைக்கு வரப்பெற்று இருதரப்பு வாதம் கேட்கப்பட்டு பின்பு வழக்கு ஆவணங்களையும் பரிசீலக்கப்பட்டு இன்று இந்நீதிமன்றத்தில் வழங்கும்.,

## தீர்ப்புரை

**1) குற்ற அறிக்கையின் சுருக்கம்:-**

திண்டிவனம் வட்டம், ஒலக்கூர் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட நங்குணம் கிராமத்தில் 18.12.2024 ம் தேதி மாலை 17.40 மணிக்கு வழக்கின் சாட்சி -1 ஜெயக்குமார்

ELAVARASI Digitally signed by ELAVARASI
Date: 2026.04.24 06:59:21 +0530

என்பவர் அவரது இரு மகள்களுடன் இரு சக்கர வாகனத்தில் தனது விவசாய நிலத்தில் உள்ள தனது வீட்டிற்கு செல்லும் மண் பாதை வழியில் சென்று கொண்டிருக்கும்போது எதிரி முனுசாமி என்பவர் தான் கையில் எடுத்து வந்த பால் பக்கெட்டால் சாட்சி -1 ன் காலில் இடித்துவிட்டு தேவிடியா பையா கண்ணை எங்கடா வச்கிருக்க பொட்ட என்று அசிங்கமாக திட்டியதும், சாட்சி -1 ஏண்டா இந்த பக்கம் சேரு உன் பக்கம் கரம்புதானடா ஒதுங்கி போயிருக்கலாம் இல்லடா என்று கூறியதும், எதிரியானவர் நீ வந்து இடிச்சிட்டு என்ன கேக்கிறாயடா என்று கையில் வைத்திருந்த பால் பாக்கெட்டால் சாட்சி -1 ன் இடது கை மற்றும் தலையில் சாவுடா என்று அடித்து சாட்சி -1 ற்கு சொற்ப காயத்தை ஏற்படுத்தி குற்றம் புரிந்ததாக எதிரியாகிய உம்மீது பிரிவுகள் 296(b), 118(1), 351(3) BNS- ன்படி ஒலக்கூர் காவல் உதவி ஆய்வாளர் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. இந்நீதிமன்றத்தால் கோப்பிற்கு எடுக்கப்பட்ட இவ்வழக்கானது பிரிவுகள் பிரிவுகள் 296(b), 118(1), 351(3) BNS -ன் கீழ் விசாரணைக்கு எடுக்கப்பட்டு எதிரிக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது.

3. எதிரி நீதிமன்றத்தில் ஆஜரான போது வழக்கு ஆவணங்களின் நகல்கள் பிரிவு 230- BNSS ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டுள்ளது.

**4)** வழக்கின் ஆவணங்களை பரிசீலனை செய்ததில் எதிரி மீது குற்றச்சாட்டு வினவுவதற்கு போதுமான முகாந்திரம் இருந்ததால் எதிரி மீது பிரிவுகள் 296(b), 118(1), 351(3) BNS – ன் கீழான குற்றச்சாட்டுகள் குறித்து வனைந்து விளக்கி கூறி

ELAVARASI Digitally signed by ELAVARASI Date: 2026.04.24 06:59:28 +0530

வினவிய போது எதிரி அவற்றை மறுத்து தான் குற்றவாளி இல்லை என்று கூறியதால் அரசு தரப்பில் சாட்சி விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

5) இந்த வழக்கில் அரசுத்தரப்பில் அ.சா. 1 முதல் அ.சா. 6 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளார்கள். அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.8 வரையிலான சான்றாவணங்கள் முன்னிடப்பட்டுள்ளது. எதிரி தரப்பில் சாட்சியம் அளிக்கப்படவில்லை.

**6) அரசு தரப்பு சாட்சிகளின் சுருக்கம்**

- காயம்பட்ட மற்றும் நிகழ்நிலை புகார்தாரரான அ.சா.1 சம்பவம் பற்றியும், புகார் அளித்தது பற்றியும் சாட்சியம் அளித்துள்ளார்.
- பார்வை மகசர் சாட்சிகளான அ.சா.2, அ.சா.4 ஆகியோர் கையொப்பம் செய்ததை பற்றி சாட்சியம் அளித்துள்ளனர்.
- சிறப்பு உதவி ஆய்வாளர் அ.சா.3 புகாரை பெற்று வழக்கு பதிவு செய்தது பற்றி சாட்சியம் அளித்துள்ளார்.
- மருத்துவர் அ.சா.5 காயம்பட்ட நபருக்கு சிகிச்சை அளித்து சொற்ப காயம் என சான்று வழங்கியது பற்றி சாட்சியம் அளித்துள்ளார்.
- காவல் உதவி ஆய்வாளர் அ.சா.6 வழக்கின் புலன் விசாரணை பற்றி சாட்சியம் அளித்துள்ளார்.

7). அரசு தரப்பு சாட்சியங்களிலிருந்து எதிரியை பாதிக்கக்கூடிய அம்சங்கள் குறித்து எதிரியிடம் பிரிவு 351(1)(b) – BNSS - ன் படி வினவியபோது எதிரி பொய் சாட்சி என்றும், பொய் வழக்கு என்றும், தனது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்று தெரிவித்தனர். எனவே, எதிரி தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

ELAVARASI Digitally signed by ELAVARASI
Date: 2026.04.24 06:59:33 +0530

**8) <u>தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை:-</u>**

**இவ்வழக்கில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை யாதெனில் எதிரி மீது பிரிவுகள் 296(b), 118(1), 351(3) BNS – ன் கீழான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.**

9) வாய்மொழி வாதம் கேட்கப்பட்டது. வழக்கு கோப்பு மற்றும் சாட்சியங்கள் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது.

10. அரசு தரப்பில் வாய்மொழி வாதம் முன் வைக்கப்படவில்லை.

11. கற்றறிந்த வழக்கறிஞர் இவ்வழக்கில் 4 நாட்கள் காலதாமதமாக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. வழக்கில் சான்று பொருள் கைப்பற்றி தாக்கல் செய்யப்படவில்லை. சம்பவ இடம் குறித்து முரண்பட சாட்சி அளிக்கப்பட்டுள்ளது. அ.சா.1 க்கு சாட்சியம் குறித்து சான்றுருத்தம் செய்யும் வகையில் சாட்சியம் இல்லை- முன்பகை காரணமாக அ.சா.1 எதிரியின் மீது பொய் புகார் கொடுத்துள்ளார். எனவே சந்தேகத்தின் பலனை அளித்து எதிரியை குற்றவாளி அல்ல என தீர்மானித்து விடுதலை செய்யுமாறு வாதிட்டார்.

**<u>12) சாட்சிய பரிசீலனைகளும், தீர்வும் ;</u>**

இவ்வழக்கில் காயம்பட்ட மற்றும் நிகழ்நிலை புகார்தாரரான **அ.சா.1 திரு.**

ELAVARASI
Digitally signed by ELAVARASI
Date: 2026.04.24 06:59:39 +0530

**ஜெயக்குமார்** அவர்கள் சாட்சியத்தில் தான் விவசாய வேலை செய்வதாகவும், கடந்த 18.12.2024 மாலை 5.40 மணியளவில் தனது இருசக்கர வாகனத்தில் தனது பிள்ளைகளை ஏப்பாக்கம் கூட்ரோட்டில் இருந்து அழைத்துச் சென்றபோது எதிரி கையில் பால் கேனுடன் வந்து தனது முட்டியில் இடித்து விட்டார் எனவும், அதனை கேட்டபோது எதிரி பால் கேனால் தலையில் அடி அடிக்க வந்த போது அ.சா.1 அதனை தடுத்தபோது அவரது இடது உள்ளங்கையில் ரத்தக்காயமும் தலையில் வீக்காயமும் ஏற்பட்டதாகவும், வண்டியில் இருந்த தனது பிள்ளைகள் இறங்கி தனது மனைவியிடம் தகவல் சொன்னதாகவும், எதிரியின் மனைவி மற்றும் ரேவதி வந்து சண்டையை மறித்ததாகவும் குறிப்பிட்டுள்ளார். அ.சா.1 ஒலக்கூர் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்துவிட்டு திண்டிவனம் அரசு மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை எடுத்துக் கொண்டதாக சாட்சியம் அளித்துள்ளார்.

13. எதிரி தரப்பு குறுக்கு விசாரணையில் அ.சா.1 தான் நல்லாத்தூர் ஒத்தவாடை தெருவில் வசிப்பதாக புகாரியில் உள்ளதா? என்றால் சம்பவ சமயத்தில் தான் நற்குணத்தில் வசித்ததாகவும், எதிரியும் நற்குணம் கிராமத்தில் வசித்ததாகவும் குறிப்பிட்டுள்ளார். புகார் கொடுத்து 22-ம் தேதி போலீசார் விசாரித்தார்கள் எனவும், புகாரில் சம்பவம் பற்றி யாருக்கு தெரியும் என சொல்லவில்லை எனவும், சாட்சி ரேவதி எதிரியின் அண்ணன் தக்ஷிணாமூர்த்தியின் மனைவி எனவும் குறிப்பிட்டுள்ளார். எதிரிக்கும் அவரின் உடன் பிறந்தவருக்கும் இருந்த பிரச்சனையை தான் பேசி வைத்ததால் தனக்கும், எதிரிக்கும் முன் விரோதம்

ELAVARASI Digitally signed by ELAVARASI Date: 2026.04.24 06:59:44 +0530

எனவும், சம்பவ இடத்தை சுற்றி சவுக்கு நிலம் விசு, முனுசாமி காலி நிலம், வெல்கம் மனைப்பிரிவு ஆகியவை உள்ளது எனவும், காவல் நிலையத்தில் சுமார் 7 மணி அளவில் புகார் கொடுத்துவிட்டு, 8.15 – 8.20 மணிக்கு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சென்றதாகவும் குறிப்பிட்டுள்ளார். தன்னை அடிக்க பயன்படுத்திய பால் கேனை எதிரியின் மனைவி எடுத்து சென்று விட்டார் எனவும், தான் வழக்கறிஞராக பணி செய்வதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

14. இவ்வழக்கில் கண்ணுற்ற சாட்சியாக பட்டியல் சாட்சி - 2 ரேவதி என்பவர் உடல்நிலை குறைவால் நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்கவில்லை என மருத்துவ ஆவணங்களுடன் ஒலக்கூர் காவல் உதவி ஆய்வாளர் அறிக்கை தாக்கல் செய்துள்ளார். எனவே பட்டியல் சாட்சி -2 ரேவதி வழக்கு விசாரணையில் இருந்து விலக்கப்பட்டார்.

15.அ.சா.1 க்கு சிகிச்சை அளித்த மருத்துவர் **அ.சா.5 திரு. ஸ்ரீனிவாசன்** அவரது சாட்சியத்தில் கடந்த 18.12.2024 இரவு 8.16 மணிக்கு தான் திண்டிவனம் அரசு மருத்துவமனையில் அவசர சிகிச்சை பிரிவிலிருந்தபோது அ.சா.1 தன்னிச்சையாக மருத்துவமனைக்கு வந்தார் எனவும், அவரை அடையாளம் தெரிந்த ஒரு நபர் அன்றைய தினம் மாலை 5.40 மணி அளவில் விவசாய நிலத்தில் கை மற்றும் பால் கேனால் தாக்கியதாக கூறினார் எனவும், அ.சா.1 க்கு இடது பக்க தலையில் பின்புறத்தில் வலி இருந்ததாகவும், இடது கையில் உள் பகுதியில் 2 செ.மீ அளவுக்கு

ELAVARASI
Digitally signed by ELAVARASI
Date: 2026.04.24 07:00:02 +0530

தோல் கிழிந்து (**Sapatical laceration** ) இருந்தது எனவும், அவருக்கு முதலுதவி அளித்ததாகவும், அவருக்கு ஏற்பட்ட காயம் சொற்ப காயம் என சான்று வழங்கியதாக குறிப்பிட்டுள்ளார். அவருக்கு ஏற்பட்ட காயம் அ.சா.1 சொன்ன விதத்திலும், கீழே கால் தடுக்கி விழுந்தாலும் ஏற்பட வாய்ப்புள்ளது. காயத்தின் வயது, நிறம் குறிப்பிடவில்லை எனவும், வலி காயம்பட்ட நபர் சொன்னதன் அடிப்படையில் எழுதியதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

16. கடந்த 18.12.2024 அன்று மாலை 5.40 மணியளவில் அ.சா.1 அவரது இரு மகள்களுடன் இருசக்கர வாகனத்தில் வந்தபோது எதிரி தகாத வார்த்தைகளால் திட்டி பால் கேனால் அடித்து சொற்ப காயத்தை ஏற்படுத்தி கொலை மிரட்டல் விடுத்தார் என்பது அரசு தரப்பு வழக்காகும். புகாரில் சம்பவ சமயத்தில் அ.சா.1 ன் இரண்டு மகள்கள் இருந்ததாகவும், அவர்கள் அவரது அம்மாவிடம் சொல்வதற்காக சென்றார்கள் எனவும் குறிப்பிட்டுள்ளார். எதிரியின் மனைவி வந்து சண்டையை மறித்துவிட்டதாக புகாரில் குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும் இவ்வழக்கில் அ.சா.1 ன் இரண்டு மகள்கள் அ.சா.1 ன் மனைவி மற்றும் எதிரியின் மனைவி ஆகியோர் சாட்சியாக விசாரிக்கப்படவில்லை. புகாரில் பட்டியல் சாட்சி - 2 ரேவதி சம்பவ இடத்தில் இருந்ததாக குறிப்பிடப்படவில்லை. எனினும் ரேவதி கண்ணுற்ற சாட்சியாக பட்டியலிடப்பட்டு மருத்துவ காரணங்களுக்காக வழக்கு விசாரணையில் இருந்து விலக்கப்பட்டுள்ளார். அ.சா.1 முதல் விசாரணையில் விவசாய வேலை செய்வதாகவும், குறுக்கு விசாரணையில் வழக்கறிஞராக பணி செய்வதாகவும்

ELAVARASI Digitally signed by ELAVARASI
Date: 2026.04.24 07:00:08 +0530

குறிப்பிட்டுள்ளார். சம்பவ இடம் குறித்து அ.சா.1 அவரது சாட்சியத்தில் ஏப்பாக்கம் கூட்ரோட்டில் இருந்து அவருக்கு வீட்டிற்கு வரும் வழியில் என குறிப்பிட்டுள்ளார். எந்த இடம் என குறிப்பிட்டு சொல்லவில்லை. மாதிரி வரைபடத்தில் சம்பவ இடத்தை சுற்றி காலி மனைகளும், மனைப்பிரிவுகளும் உள்ளது சற்று தள்ளி ரேவதி, எதிரி முனுசாமி, அ.சா.1ன் வீடு உள்ள நிலையில் அ.சா.1 ன் மனைவி மற்றும் மகள், புகாரில் சண்டையை மறித்ததாக கூறிய எதிரியின் மனைவி இவ்வழக்கில் சாட்சியாக விசாரிக்கப்படவில்லை. எனவே மேற்படி காரணங்களினால் சம்பவம் குறித்து சந்தேகிக்கும் வகையில் உள்ளது என இந்நீதிமன்றம் கருதுகிறது.

17. பார்வை மகசர் சாட்சியாக முன்னிலைப்படுத்தப்பட்ட **அ.சா.2 திரு. சிவகுமார்** அவரது சாட்சியத்தில் கடந்த 23.12.2024 காலை 8.00 மணிக்கு நற்குணத்தில் உள்ள அம்மன் பிளாட் வழியாக சென்றபோது போலீசார் விசாரித்து வரைபடம் வரைந்து எழுதி சாட்சி கையொப்பம் பெற்றதாக குறிப்பிட்டுள்ளார். அ.சா.2 குறுக்கு விசாரணையில் அ.சா.1 அவரது பக்கத்து வீட்டுக்காரர் எனவும், அ.சா.1 க்கும், எதிரிக்கும் பேச்சுவார்த்தை இல்லை எனவும், சம்பவ இடத்தில் தனக்கு நிலம் கிடையாது எனவும், தனது நண்பர் பெருமாள் என்பவரை அன்றைய தினம் பார்க்க வந்தபோது சாட்சி கையொப்பம் பெற்றதாக குறிப்பிட்டுள்ளார்.

18. மற்றொரு பார்வை மகசர் சாட்சியான **அ.சா.4 திரு. சண்முகம்** அவரது சாட்சியத்தில் கடந்த 23.12.2024 காலை 8 மணிக்கு கோனேரிக்குப்பத்தில் உள்ள

ELAVARASI Digitally signed by ELAVARASI
Date: 2026.04.24 07:00:13 +0530

வெல்கம் சிட்டி அருகே கடந்த நண்பர் ஜெயக்குமார் என்பவரை பார்க்க சென்றபோது ஒலக்கூர் போலீஸ் சண்டை சம்பந்தமாக விசாரித்து மேப் போட்டு தன் முன்பாக எழுதி சாட்சி கையொப்பம் பெற்றதாக குறிப்பிட்டுள்ளா. அ.சா.4 குறுக்கு விசாரணையில் அ.சா.4 தனது சொந்த ஊர் சிங்கனூர் எனவும், கோனேரிகுப்பம் அருகே தனக்கு வீடு நிலம் கிடையாது எனவும், மரம் வெட்டுவது சம்பந்தமாக ஜெயக்குமாரை பார்க்க சென்றதாகவும், இவ்வழக்கின் புகார்தாரர் திரு. ஜெயக்குமார் தனது நண்பர் அவர் வழக்கறிஞர் என குறிப்பிட்டுள்ளார்.

19. பார்வை மகசர் சாட்சிகளான அ.சா.2, அ.சா.4 ஆகியோர் சம்பவ இடத்தில் வரைபடம் வரைந்து சாட்சி கையொப்பம் பெற்றது பற்றி சாட்சியம் அளித்துள்ள போதிலும், சம்பவ இடத்தை சார்ந்த நபர்கள் அல்ல என அவர்களது சாட்சியத்தில் குறிப்பிட்டுள்ளனர்.

20. காவல் சிறப்பு உதவி ஆய்வாளர் **அ.சா.3 திரு. கலைமணி** அவரது சாட்சியத்தில் கடந்த 18.12.2024 மாலை 7.20 மணியளவில் தான் ஒலக்கூர் காவல் நிலையத்தில் நிலைய பொறுப்பில் இருந்தபோது அ.சா.1 நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று சி எஸ் ஆர் பதிவு செய்து 22.12.2024 மாலை 6.30 மணிக்கு வழக்கின் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ததாகவும் வழக்கு கோப்பினை உதவி ஆய்வாளர் பார்வைக்கு வைத்ததாகவும் குறிப்பிட்டுள்ளார்.

21. எதிரி தரப்பு குறுக்கு விசாரணையில் அ.சா.3 இவ்வழக்கில் சி.எஸ்.ஆர் பதிவு

ELAVARASI Digitally signed by ELAVARASI Date: 2026.04.24 07:00:18 +0530

செய்யாமல் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யும் அதிகாரம் தனக்கு உள்ளதாகவும், அயல் பணி காரணமாக முதலில் புகார் பெற்றவுடன் சி எஸ் ஆர் பதிவு செய்து பின்னர் 4 நாட்கள் கழித்து விசாரித்து வழக்கு பதிவு செய்ததாகவும் குறிப்பிட்டுள்ளார்.

22. எதிரி தரப்பில் நான்கு நாட்கள் காலதாமதமாக புகார் கொடுக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது. புகாரில் 18.12.2024 என தேதியிடப்பட்டுள்ளது. புகாரை பெற்ற தேதி 18.12.2024 மாலை 7. 20 மணி எனவும், சி எஸ் ஆர் பதிவு செய்ததாகவும் குறிப்பு உள்ளது. பதிவு செய்யப்பட்ட சிஎஸ்ஆர் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எனவே புகாரானது 18.12.2024 பெறப்பட்டு சி.எஸ்.ஆர் பதிவு செய்யப்பட்டுள்ளது தெளிவாகியுள்ளது. புகாரில் குறிப்பிட்டுள்ள விவரங்கள் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யும் உள்ளதாக இருந்த போதிலும் அ.சா.3 அயல் பணிக்கான நான்கு நாட்கள் கழித்து வழக்கு பதிவு செய்ததாக குறிப்பிட்டுள்ளார். அ.சா.3 அயல் பணி காரணமாக நான்கு நாட்கள் காலதாமதமாக வழக்கு பதிவு செய்யப்பட்டதாக முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடப்படவில்லை.

23. இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி **அ.சா.6 திரு.சசிகுமார் காவல் உதவி ஆய்வாளர்** அவரது சாட்சியத்தில் கடந்த 23.12.2024 அன்று காலை 8 மணிக்கு சிறப்பு உதவி ஆய்வாளர் பதிவு செய்த இவ்வழக்கினை தனது மேல்விசாரணைக்கு எடுத்துக்கொண்டு காலை 8 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் முன்னிலையில் பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்ததாகவும்,

ELAVARASI Digitally signed by ELAVARASI Date: 2026.04.24 07:00:24 +0530

சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும் குறிப்பிட்டுள்ளார். எதிரி நீதிமன்ற பிணையில் சென்றுள்ளார். அ.சா.1 க்கு சிகிச்சை அளித்த மருத்துவர் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சிறப்பு உதவி ஆய்வாளர் கலைமணியை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். வழக்கின் புலன் விசாரணை முடித்துக் கொண்டு எதிரியின் மீது BNS சட்டப்பிரிவுகள் 296(b), 118(1), 351(3) BNS - ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்ததாக குறிப்பிட்டுள்ளார்.

24. எதிரி தரப்பு குறுக்கு விசாரணையில் அ.சா.6 நான்கு நாட்கள் காலதாமதமாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது எனவும், சம்பவ இடத்துக்கும், காவல் நிலையத்திற்கும் சுமார் மூன்று கிலோ மீட்டர் தூரம் உள்ளது எனவும் புகாரிலும் அ.சா.1 வாக்குமூலத்திலும் மண் பாதையில் சம்பவம் நடைபெற்றதாக உள்ளதாகவும், விபத்து பதிவேட்டு நிலத்தில் உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது எனவும், நிலத்துக்குள் மண் சாலை உள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார். சம்பவ இடத்துக்கு அருகில் உள்ள நிலத்தின் உரிமையாளர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யவில்லை எனவும், அவர்கள் சம்பவ சமயத்தில் இல்லை எனவும் குறிப்பிட்டுள்ளார். பார்வை மகசர் சாட்சிகளுக்கு சொந்தமாக நிலம் சம்பவ இடத்துக்கு அருகில் இல்லை எனவும், புகாரில் பொருள் முன்பகை காரணமாக கொலை வெறி தாக்குதல் என குறிப்பிடப்பட்டுள்ளது எனவும், எதரியை கைது செய்யாததால் பால் கேனை கைப்பற்றவில்லை எனவும் குறிப்பிட்டுள்ளார். காவல்

ELAVARASI Digitally signed by ELAVARASI
Date: 2026.04.24 07:00:33 +0530

உதவி ஆய்வாளர் அ.சா.6 சாட்சி மற்றும் சாட்சிகளின் வாக்குமூலத்தின் படி 23.12.2025 அன்று சாட்சிகளை விசாரித்ததாக உள்ளது அ.சா.1 அவரது சாட்சியத்தில் 22-ம் தேதி போலீசார் தன்னை விசாரித்ததாக குறிப்பிட்டுள்ளார்.

25. காயம்பட்ட மற்றும் நிகழ்நிலை புகார்தாரரான அ.சா.1 சம்பவம் பற்றியும், புகார் அளித்தது பற்றியும் சாட்சியம் அளித்துள்ளார். புகாரில் சம்பவ இடத்தில் இருந்ததாக குறிப்பிட்டுள்ள அ.சா.1 ன் இரு மகள்கள் மற்றும் எதிரியின் மனைவி ஆகியோர் இவ்வழக்கில் சாட்சியாக விசாரிக்கப்படவில்லை. அ.சா.1 ன் இரண்டு மகள்கள் சம்பவம் பற்றி அவர்களது அம்மாவிடம் சொல்ல சென்றதாக குறிப்பிட்டுள்ள நிலையில், அ.சா.1 ன் மனைவியும் வழக்கில் சாட்சியாக விசாரிக்கப்படவில்லை. பார்வை மகசர் சாட்சிகளான அ.சா.2, அ.சா.4 சம்பவ இடத்தில் வரைபடம் வரைந்தது பற்றி கூறியுள்ளனர். எனினும் அ.சா.2, அ.சா.4 ஆகியோர் சம்பவ இடத்தை சார்ந்தவர்கள் அல்ல. காவல் சிறப்பு உதவி ஆய்வாளர் அ.சா.3 வழக்கு பதிவு செய்தது பற்றி குறிப்பிட்டுள்ளார். புகார் கொடுத்து சி.எஸ்.ஆர் பதிவு செய்யப்பட்டு நான்கு நாட்கள் கழித்து காலதாமதமாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது. மருத்துவர் அ.சா.5 காயம்பட்ட நபருக்கு சிகிச்சை அளித்து சொற்ப காயம் என சான்று வழங்கியது பற்றி சாட்சியம் அளித்துள்ளார். காவல் உதவி ஆய்வாளர் அ.சா.6 வழக்கின் புலன் விசாரணை பற்றி சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.1 மற்றும் எதிரி இருவருக்கும் ஏற்கனவே முன்பகை இருந்து வந்துள்ள நிலையில், சம்பவ இடத்தில் இருந்ததாக புகாரின் குறிப்பிட்டுள்ள நபர்களையும் சாட்சியாக விசாரிக்காதது சம்பவம்

ELAVARASI Digitally signed by ELAVARASI Date: 2026.04.24 07:00:39 +0530

குறித்து சந்தேகிக்கும் வகையில் உள்ளது. எனவே மேற்படி காரணங்களினால் எதிரி முன் பகை காரணமாக அ.சா.1-யை தகாத வார்த்தைகளால் திட்டி, பால் கேனால் அடித்து சொற்ப காயம் ஏற்படுத்தி, கொலை மிரட்டல் விடுத்ததான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபணம் செய்யப்படவில்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது.

26. அரசு தரப்பு சாட்சியங்கள் அ.சா.1 முதல் அ.சா.6 வரையிலான சாட்சிகள் மற்றும் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.8 வரையிலான சான்றாவணங்கள்படியாக எதிரி மீது பிரிவுகள் 296(b), 118(1), 351(3) BNS -ன் கீழான குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு இடமற்ற வகையில் நிரூபணம் செய்யப்படவில்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

**27. இறுதியாக, எதிரி மீது பிரிவுகள் பிரிவுகள் 296(b), 118(1), 351(3) BNS ன் கீழான குற்றமானது அரசு தரப்பு சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படாததால் எதிரி குற்றவாளி இல்லை என தீர்மானித்து பிரிவு 271(1) - BNSS-ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.**

28. இவ்வழக்கில் வழக்கு சொத்துக்கள் எதுவும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை. எதிரி எழுதிக்கொடுத்த பிணைப்பத்திரம் அது இதன் மூலம் ரத்து செய்யப்படுகிறது.

என்னால் இத்தீர்ப்புரை சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக கணினியில்

ELAVARASI Digitally signed by ELAVARASI Date: 2026.04.24 07:00:46 +0530

சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2026 ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 24 -ம் வெள்ளிக்கிழமை என்னால் அவையறிய பகரப்பட்டது.

ELAVARASI Digitally signed by ELAVARASI Date: 2026.04.24 07:00:51 +0530

நீதித்துறை நடுவர் எண். I,

திண்டிவனம்.

**இணைப்பு:-**

**அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள்:-**

| | | |
|---|---|---|
| அ.சா.1 | திரு.ஜெயக்குமார் | காயம்பட்ட மற்றும் நிகழ்நிலை புகார்தாரர் |
| அ.சா.2 | திரு.சிவக்குமார் | பார்வை மகசர் சாட்சி |
| அ.சா.3 | திருமதி.கலைமணி | சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் |
| அ.சா.4 | திரு.சண்முகம் | பார்வை மகசர் சாட்சி |
| அ.சா.5 | திரு.சீனிவாசன் | மருத்துவர் |
| அ.சா.6 | திரு.சசிக்குமார் காவல் உதவி ஆய்வாளர் | புலன் விசாரணை அதிகாரி |

**அரசு தரப்பில் குறியிடப்பட்ட சான்றாவணங்கள்:-**

| அ.சா.ஆ. எண்கள். | தேதி | ஆவணங்களின் விபரம் | ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்ட சாட்சிகள் |
|---|---|---|---|
| அ.சா.ஆ.1 | 18.12.2024 | புகார் மனு | அ.சா.1 |

| | | | |
|---|---|---|---|
| அ.சா.ஆ.2 | ---- | பார்வை மகசரில் உள்ள அ.சா.2 ன் கையொப்பம் | அ.சா. 2 |
| அ.சா.ஆ.3 | 18.12.2024 | சி.எஸ்.ஆர்.மனு ரசீது எண்.815/2024 | அ.சா. 3 |
| அ.சா.ஆ.4 | 22.12.2024 | முதல் தகவல் அறிக்கை | அ.சா.3 |
| அ.சா.ஆ.5 | ---- | பார்வை மகசரில் உள்ள அ.சா.4 ன் கையொப்பம் | அ.சா. 4 |
| அ.சா.ஆ.6 | 18.12.2024 | அ.சா.1 ன் விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று | அ.சா.5 |
| அ.சா.ஆ-7 | 23.12.2024 | பார்வை மகசர் | அ.சா.6 |
| அ.சா.ஆ-8 | 23.12.2024 | மாதிரி வரைபடம் | அ.சா.6 |

**அரசு தரப்பில் குறியிடப்பட்ட சான்றுப்பொருட்கள்**:- இல்லை

**எதிரி தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்**:-இல்லை

ELAVARASI Digitally signed by ELAVARASI Date: 2026.04.24 07:01:02 +0530

நீதித்துறை நடுவர் எண். I,

திண்டிவனம்.